QB365 https://www.qb365.in/materials/

# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

-----

## வகுப்பு 11

பதிவெண் [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

நேரம்: 2.30 மணி **PART - III - வணிகவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:**

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு:**

### பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20×1=20**

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

iii) விடையினைக் குறியீட்டுடன் சேர்த்து எழுதவும்.

1) அன்பு மற்றும் பாசம் அல்லது சமூகசேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்
அ) பொருளாதாரச் செயல்பாடுகள் ஆ) பண நடவடிக்கைகள்
இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஈ) நிதி நடவடிக்கைகள்

2) அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

3) பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு .............. என்று பெயர்.
அ) அங்காடி ஆ) சந்தை இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி

4) மருத்துவர் தொழில் என்பது ..............
அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத்தொழில் ஈ) தனியார் வணிகம்

5) இந்து கூட்டு குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?
அ) உடன்படிக்கையால் ஆ) பிறப்பால்
இ) முதலீட்டின் அடிப்படையில் ஈ) நிர்வாகத்தின் அடிப்படையில்

6) கூட்டாண்மை ஒப்பாவணத்தை இவ்வாறு அழைக்கலாம் ..............
அ) சங்க நடைமுறை விதிகள் ஆ) கூட்டாண்மை சங்க நடைமுறை விதிகள்
இ) கூட்டாண்மைச் சட்டம் ஈ) கூட்டாண்மை

7) நிறுவனத்திற்கும் வெளிநபர்களுக்கும் உள்ள உறவுமுறையைப் பற்றிக் குறிப்பிடுவது எது?
அ) தகவலறிக்கை ஆ) சங்க நடைமுறை விதிகள்
இ) அமைப்பு முறையேடு ஈ) கூட்டுருவாக்கச் சான்றிதழ்

8) அனைத்து கூட்டுறவுகளும் நிறுவப்படுவதற்கு
அ) தொண்டு நிறுவன நோக்கம் ஆ) சேவை நோக்கம்
இ) இலாப நோக்கம் ஈ) சீர்திருத்த நோக்கம்

9) தலைமை அலுவலகத்தின் கிளைகள் / துணை நிறுவனங்கள் / துணை நிறுவனங்களுக்கு முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்குவது
அ) மையப்படுத்துதல் ஆ) பரவலாக்கம் இ) அதிகாரம் ஈ) ஒருங்கிணைப்பு

10) அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம் என்பது ..............
அ) இலாபம் ஈட்டுதல் ஆ) வேலைவாய்ப்பை உருவாக்குதல்
இ) மக்களுக்கு சேவை செய்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

11) வெளிநாட்டு வங்கிகள் தங்கள் செயல்பாடுகளை இந்தியாவில் ஆரம்பித்த ஆண்டு
அ) 1979 ஆ) 1980 இ) 1981 ஈ) 1982

12) பண்டகக் காப்பகம் .............. தடையை நீக்குகிறது.
அ) ஆள்சார் ஆ) காலம் இ) இடர்பாட்டு ஈ) அறிவு

13) இந்தியாவின் மிகப்பெரிய வணிக வங்கி
அ) ஐசிஐசிஐ ஆ) எஸ் பி ஐ இ) பீ என் பி ஈ) ஆர் பி ஐ

14) மிக வேகமான போக்குவரத்துக்கான வழி என்ன?
அ) தொடர்வண்டி ஆ) சாலை இ) கடல் ஈ) விமானம்

15) காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு .............. ஆகும்.
அ) மிக்க நம்பிக்கை ஆ) கூட்டுறவு இ) பகர உரிமை ஈ) அண்மைக் காரணம்

Scanner

16) உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது
அ) கிராம சேமிப்பு ஆ) வணிக சேமிப்பு இ) தொழில்துறை வளர்ச்சி ஈ) விவசாய வளர்ச்சி
17) புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை ...............
அ) உற்பத்தி திறன் ஆ) செலவு குறைப்பு இ) திறன் ஈ) அலகுகள்
18) ராக்டேல் சொசைட்டி தோற்றுவித்தவர்
அ) ராபர்ட் ஓவன் ஆ) H.C. கால்வெட் இ) டால் மாக்கி ஈ) லம்போர்ட்
19) தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு
அ) வரையறு பொறுப்பு ஆ) வரையறாப் பொறுப்பு
இ) அமைப்பெளிமை ஈ) விரைவான முடிவு
20) மின்னனு வங்கியினை .............. மூலம் செயல்படுத்தலாம்.
அ) கணினிகள் ஆ) கைபேசிகள்
இ) ஏடிஎம் அட்டை ஈ) மேலே உள்ள அனைத்தும்

## பகுதி - II

7×2=14

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
அவற்றில் வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21) நாளங்காடி என்றால் என்ன?
22) சிறப்புத் தொழில் என்றால் என்ன?
23) வணிகத்தை வரையறுக்க.
24) பன்னாட்டு நிறுமம் இலக்கணம் தருக.
25) கர்த்தா என்பவர் யார்?
26) மையவங்கி பற்றிச் சுருக்கமாக எழுதுக.
27) நீர் போக்குவரத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகள் எழுதுக.
28) மருத்துவ காப்பீடு என்றால் என்ன?
29) பண்டகக்காப்பு என்றால் என்ன?
30) மின்னனு வணிகம் பற்றி நீவிர் அறிவது யாது?

## பகுதி - III

7×3=21

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31) சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
32) நிதித்தடை என்பது யாது?
33) தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்களைக் கூறுக.
34) அயல்நாட்டு நிறுமம் என்றால் என்ன?
35) வங்கி சேவைகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
36) பண்டகக் காப்பாளர் இரசீது - பண்டக சான்றாணை வேறுபடுத்துக.
37) அரசு நிறுமம் என்றால் என்ன?
38) பயிர்க் காப்பீட்டின் பொருள் தருக.
39) நிலப் போக்குவரத்தின் வகைகள் யாவை?
40) வணிகத்தின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விவரி.

## பகுதி - IV

7×5=35

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:

41) வணிகத்தின் தடைகள் யாவை? அவை எவ்வாறு நீக்கப்படுகின்றன? (அல்லது)
கூட்டுறவுச் சங்கத்தின் வகைகளைக் கூறுக.
42) தொழிலின் ஏதேனும் ஐந்து நோக்கங்களை விவரி. (அல்லது)
பன்னாட்டு நிறுமத்தின் நன்மைகளை விவரி.
43) உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் ஓர் ஒப்பீடு செய்க. (அல்லது)
துறைவாரி நிறுமத்தின் சிறப்பியல்புகள் யாவை?
44) தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை? (அல்லது)
இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக.
45) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? (அல்லது)
மின்னனு வணிக மாதிரிகள் பற்றிக் குறிப்பு வரைக.
46) போக்குவரத்து பல்வேறு வகைகளை விவரிக்க. (அல்லது)
வணிக வங்கிகளின் பல்வேறு வகயான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.
47) பல்வேறு வகையான பண்டக காப்பகங்கள் யாவை? (அல்லது)
காப்பீட்டின் கோட்பாடுகளை விரிவாகக் கூறுக.

@@@@@@